சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 16.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 10261/E/2023**

திரு.D.வெங்கடேசன் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்,
நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையர் அலுவலகசம்,
சர்வே இல்லம், 3-வது தளம்,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது/ நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் - 9.

பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 23.01.2025, 19.05.2025 மற்றும் 25.09.2025 ஆகிய தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, பொதுத் தகவல் அலுவலர் திருமதி.சு.ஜெயசித்ரா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), வேலூர் அவர்கள் சார்பு திருமதி.வாசுகி, கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் அவர்கள் இவ்வாணையத்தில் 29.01.2026-ல் நேரில் ஆஜராகி, இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம், விருதம்பட்டு கிராமத்திற்கான OSR, RSR மற்றும் Correlation Statement பதிவேடுகள் தங்கள் அலுவலக

பதிவு வைப்பறையில் பராமரிப்பில் இல்லை என்பதற்கான பிரமாண பத்திரம் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

2. பொதுத் தவல் அலுவலர் திருமதி.அகிலா தேவி, உதவி நிலவரித்திட்ட அலுவலர் (வடக்கு) சேப்பாக்கம், சென்னை அவர்கள் சார்பு திரு.கிருபா, அவர்கள் இவ்வாணையத்தில் 06.02.2026-ல் நேரில் ஆஜராகி, வேலூர் மாவட்டம் (பழைய வட ஆற்காடு மாவட்டம்), காட்பாடி வட்டம் (பழைய குடியாத்தம் வட்டம்), விருத்தம்பட்டு கிராமத்தின் OSR, RSR, SLR, TD No.1, Correlation Statement ஆகிய ஆவணங்கள் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் அலுவலக பராமரிப்பில் இல்லை என்பதற்கான பிரமாண பத்திரம் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

3. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 23.01.2025, 19.05.2025 மற்றும் 25.09.2025 ஆகிய தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, (1) பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), வேலூர் அவர்களால் 04.11.2025 தேதியிட்டும் (2) பொதுத் தவல் அலுவலர், உதவி நிலவரித்திட்ட அலுவலர் (வடக்கு) சேப்பாக்கம், சென்னை அவர்களின் 03.02.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும் மனுதாரருக்கு பிரமாண பத்திரமானது தகவலாக வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஒம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 10261/E/2023**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/ உதவி ஆணையர்,
நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையர்
அலுவலகசம், சர்வே இல்லம், 3-வது தளம்,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது/ நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.D.வெங்கடேசன், த/பெ.C.சுப்பிரமணி,
சித்தேரி தெரு, குச்சிப்பாளையம் கிராமம்,
திப்பசமுத்திரம் அஞ்சல், பள்ளிகொண்டா வழி,
வேலூர் மாவட்டம் - 635 809.

Copy to: File MP/PA,